மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காகத்தான் 'ப்ரீ பெயிட் சிஸ்டம்' என்று ஆட்டோ சிஸ்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். இப்போது சென்னையிலே இருக்கிற சென்ட்ரலில் கொண்டுவந்திருக்கிறோம். படிப்படியாக எல்லா பகுதிகளுக்கும் கொண்டு வருவதற்கு நாங்கள் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம். அதற்காக ஆட்டோ உரிமையாளர்கள் முன்வர வேண்டும். அதுதான் இங்குள்ள சிக்கல். சில சிக்கல் இருக்கிறபோது நாங்கள் கடுமையான நடவடிக்கை எடுக்கிறபோது சில போராட்டங்கள் நடக்கிறபோது, சில கட்சிகளைச் சார்ந்தவர்கள் அந்தப் போராட்டத்தைத் தூண்டி விடுகிறார்கள். இதுபோன்று நாங்கள் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளமுடியாத சூழ்நிலை இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். ஆகவே நாங்கள் முடிந்த அளவிற்கு இந்த ஆட்டோக்களில் தவறுகளைச் சுட்டிக்காட்டுகிறபோது நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 7, திருமதி அ.தி. சரஸ்வதி, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

7—

வன விளைப்பொருட்கள் திருடு போவதைக் தடுக்க நடவடிக்கை

**25272—திருமதி அ.தி. சரஸ்வதி:*

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாளவாடி-கடம்பூர் மலைப்பகுதிகளில் நெல்லிக்காய், கடுக்காய், பூச்சங்காய் மற்றும் கல்பாசம், மரப்பாசம் போன்ற வன விளைப்பொருட்கள் களவு போவதைத் தடுக்க அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழக சிறப்புக் காவல் படை, கர்நாடகா மாநில சிறப்பு அலுவல் காவல் படை, எல்லைப்பாதுகாப்பு படைப்பிரிவினரும் சந்தனக் கடத்தல் வீரப்பன் கூட்டத்தைப் பிடிக்கும் முயற்சியாக தீவிர

1995 மார்ச் 15]

கண்காணிப்பு மேற்கொண்டு வருவதால் இம்மலைப்பகுதிகளில் பொது மக்கள் நடமாட்டமும், வனப்பொருட்கள் திருடுவோர் நடமாட்டமும் வெகுவாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. எனவே. கடம்பூர் மற்றும் தாளவாடி மலைப்பகுதிகளில் வனவிளைப்பொருட்கள் களவுநடைபெற வாய்ப்பில்லை. வனத்துறை சோதனைச் சாவடிகளிலும் தீவிரத் தணிக்கை செய்யப்பட்டு களவு போகாமல் தடுக்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 10-30

திருமதி அ.தி.சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழுலகம் வியக்கும் வண்ணம் 8-ஆம் உலக தமிழ் மாநாடு, எழில் கொஞ்சும் தஞ்சை தரணியில் நடத்திய, அன்னை சந்தியா தந்த இந்தியத் தாய், சமூக நீதி காத்த வீராங்கனை, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில், தமிழகம் மட்டும் அல்ல, அண்டை மாநிலங்களும் போற்றி புகழும் வண்ணம் போக்குவரத்தை பொலிவுடனும், வனத்துறையை வளமாகவும் அந்தத் துறையை சிறப்பாக வழி நடத்திச் செல்லும் மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்கள் மலை வாழ் மக்களின் நலன் கருதி, தாளவாடி கடம்பூர் மலைப்பகுதிகளில் விளையும் விளைபொருட்கள், நெல்லிக்காய், கடுக்காய், பூச்சங்காய், மற்றும் கல்பாசம், மரப்பாசம் சீமாத்தம்பூ ஆகிய விளை பொருட்கள் திருடு போகாமல் இருக்க கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று பேரவையில் அறிவித்தார்கள். அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைக் கூறி மற்றும் ஆசனூரில் மலை வாழ் மக்கள் சொஸைட்டியை ஏற்படுத்தி, வனத்துறை அதிகாரிகள் மூலமே அந்த வனப் பொருட்களை சேகரம் செய்து, ஏலம் விட்டு, அந்தப் பகுதியில் வாழும் மக்களின் வாழ்க்கையில் ஒளி விளக்கை ஏற்றுவார்களா என அவர்களைப் பேரவையின் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரப்பனைப் பிடிக்கின்ற முயற்சியில் அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிற காரணத்தினாலே அங்கு 144 தடை உத்தரவு போடப்பட்டிருக்கிறது. யாரும் அங்கே வனப்பகுதிக்குள்ளாகச் செல்லக் கூடாது என்பதுதான். அவர்களை உடனடியாகக் கண்டுபிடிக்க முடியும் என்ற அடிப்படையில்தான் இது போன்ற வனபபொருட்களை எடுத்து, உடனே கூட்டுறவு சங்கங்களுக்கு நாம் வழங்குவதற்கு வாய்ப்பு இல்லாத சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 8 மற்றும் 9, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுக்கோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகின்றன. பின்னர் ஒரு நாள் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா எண் 10, டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

10—

கன்னியாகுமரி மாவட்டத்தில் வீடுகட்ட நீண்டகாலக் கடனுதவி வழங்குதல்

*16895—**டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை:**

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் புயல் மற்றும் பெருவெள்ளத்தால் வீடு இழந்தோருக்கு வீடு கட்ட நீண்டகாலக் கடனுதவி செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டத்தில் 1992-93 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வீடு இழந்தவர்களுக்கென்று நிபந்தனைகளுக்குட்பட்டு நீண்டகால கடன் வழங்கப்பட்டு வருகிறது.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மக்கள் நலத் திட்டங்கள் வழங்க குமரி மாவட்டத்திற்கு வருகை தந்தபோது புயல் மற்றும் பெருவெள்ளத்தால் வீடு இழந்தவர்களுக்கு வீடு கட்ட மானியமாக ரூபாய் 3 ஆயிரமும், கடனாக 6 ஆயிரமும் வழங்க ஆணையிட்டார்கள். அதற்காக குமரி மாவட்ட மக்கள் சார்பாக என் நெஞ்சார்ந்த நன்றியை இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு பணிவுடன் சமர்ப்பிக்கிறேன். அந்த மானியத் தொகையை 5 ஆயிரமாக உயர்த்தியும், அந்தக் கடன் தொகையை 10 ஆயிரமாகவும்